## லால்குடி அருகேஸ்டேன் சுவாமி சிலைதிறப்பு: கனிமொழி எம்.பி. பங்கேற்பு!

திருச்சி மாவட்டம், லால்குடி அருகேவிரகாலூரில் ஸ்டேன் சுவாமி சிலையைகனிமொழி எம்.பி. சனிக்கிழமைதிறந்துவைத்தார்.



திருச்சி மாவட்டம் லால்குடி அருகேவிரகாலூரில் ஸ்டேன் சுவாமி

சிலையை கனிமொழிஎம்.பி. சனிக்கிழமைதிறந்துவைத்தார்.

திருச்சிமாவட்டம், லால்குடியை அடுத்த விரகாலூர் கிராமத்தில் பிறந்து அருட்பணிக்காக துறவு மேற்கொண்டு, மக்கள் பணிக்காகப் படித்து 1975 முதல் 1990 வரைஆசிரியராகப் பணியாற்றி, ஜார்ஜ்கண்ட் மாநிலத்தில் பழங்குடியின மக்களின் உரிமைகளுக்காகப் பாடுபட்டவர் ஸ்டேன் சுவாமி.

பல்வேறு போராட்டங்கள் காரணமாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட இவர், நோய் வாய்ப்பட்டு கடந்த 2021 ஜூலை5 இல் இறந்தார்.

இதையடுத்து இவரது நினைவாக விராகலூரில் தமிழக ஆயர் பேரவை மற்றும் விரகலூர் ஸ்டேன் சுவாமி கூட்டமைப்பின் சார்பில் ஸ்டேன் சுவாமி சிலை திறப்பு விழா மற்றும் ஜனநாயக மாநாடு சனிக்கிழமை நடைபெற்றது.

மாநாட்டை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை வகித்து தொடங்கி வைத்தார். கும்பகோணம் ஆயர் ஜீவானந்தம் தொடக்க உரையாற்றினார்.

திருச்சி திமுக மத்திய மாவட்டச் செயலர் வைரமணி, காங்கிரஸ் தலைவர் கலைச்செல்வன், விசிக மாவட்டச் செயலர் அன்புச் செல்வன், மார்க்சிஸ்ட் நகர் மாவட்டச் செயலர் ஜெயசீலன், கிறிஸ்தவ நல்லெண்ண இயக்க மாவட்டத் தலைவர் தேவராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மனித உரிமைக் காப்பாளர் கூட்டமைப்பு தேசியச் செயலர் ஹென்றிடிபேன், மக்கள் சிவில் உரிமைக் கழக தேசியச் செயலர் பாலமுருகன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில பொதுச் செயலர் முஹமது அபூபக்கர், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கத் தலைவர் எம்எல்ஏ இனிகோ இருதயராஜ், லால்குடி எம்எல்ஏ அ. சௌந்தரபாண்டியன் , காங்கிரஸ் கட்சியின் வேலுச்சாமி, கடலூர், பாண்டிச்சேரி பேராயர் பிரான்சிஸ் கலிஸ்ட், இந்திய கம்யூ. மாநிலச் செயலர் முத்தரசன், மார்க்சிஸ்ட் மாநிலச் செயலர் சண்முகம் உள்ளிட்டோர் சிறப்புரையாறினர்.

ஸ்டேன் சுவாமி சிலையை திமுக துணைப் பொதுச் செயலரும் எம்.பி.யு மான கனிமொழி திறந்து வைத்தார். தொடர்ந்து விசிக தலைவர் தொல்.திருமாவளவன் கலந்து கொண்டார். முன்னதாக தமிழகத்தில் உள்ள பல்வேறு மறைமாவட்ட ஆயர்கள், பாதிரியர்கள், அருட்சகோதரிகள், பல்வேறு கட்சியினர் தீர்மானங்களை நிறைவேற்றினர். ஸ்டேன் சுவாமி மக்கள் கூட்டணி ஒருங்கிணைப்பாளர் சந்தனம் வரவேற்றார். பங்குத்தந்தை ஆரோக்கியசாமி நன்றி கூறினார்.

https://www.dinamani.com/all-editions/edition-trichy/2025/Jul/05/unveiling-of-the-statue-of-stan-swamy-near-lalgudi-kanimozhi-mp-participation